ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2128/12 - 2019 ජුනි මස 18 වැනි අඟහරුවාදා - 2019.06.18
*2128/12 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: ATU/LND/04/DO/41.
காணி அமைச்சின் இல.: 4-3/2016/HA/89.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மாத்தறை மாவட்டத்தில், ககபடபத்துவ அதுரலிய பிரதேச செயலாளர் பிரிவிலே தலஹகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை நில அளவை மாஅதிபரின் அ. க. பி. 86 இல் மேலதிக எண் 37 கொண்ட இறுதி முற்படப் பிரதியிலே விபரிக்கப்படும் கீழ்வரும் காணியின் விபரம் பின்வருமாறு :

1. துண்டு இல. 807
காணியின் பெயர் : பரணபன்ஸல்வத்த; விபரம் : வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம் உண்டு; உரிமை கோருவோர்: விகாராதிபதி சங்கைக்குரிய கிரம போடிரதன தேரோ, ஸ்ரீ தர்ம ரக்சித புராண விகாரை, அகலகட; விஸ்தீரணம்: 0.0181 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆந் திகதி பி. ப. 01.00 மணிக்கு அதுரலிய பிரதேசச் செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிரோஷா எஸ். கமகே,
பிரதேச செயலாளர்,
அதுரலிய.

பிரதேச செயலகம்,
அதுரலிய,
2019, யூன் 12.

7 - 35

1A - G 30306 - 23 (2019/06)
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: மது/கா.ஏ/4/376.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 03J/88/E/226.

2004.09.13 ஆந் திகதிய 1358/4 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் கையேற்புச் செய்யும் காணியின் துண்டுகள், துண்டு இல. 01 இற்குப் பதிலாக துண்டு இல. 02 என்றவாறு திருத்தியமைக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகிறோம்.

சியாமா பீ. காரியவசம்,
பிரதேச செயலாளர்,
மதுகம.

பிரதேச செயலகம்,
மதுகம.

7 - 36